ஒன்றிய பா.ஜ.க. – துணை போகும் அ.தி.மு.க.வைக் கண்டித்து

சேலம் கிழக்கு மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் ஆர்ப்பாட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. அறிக்கை!

சேலம், பிப். 12-

கழகத் தலைவர் அவர்களின் அறிவுரைக்கிணங்க, "ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டுள்ளதற்கு எதிராகவும், நூறு நாள் வேலையை ஒழிக்கும் சட்டம், விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் என ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ் நாட்டை புறக்கணித்து, தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்து வளர்ச்சியைத் தடுத்து வரும் ஒன்றிய பாஜக அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அடிமை அதிமுகவையும் கண்டித்து இன்று (வியாழக்கிழமை 10-02-2026) மாலை 4.00 மணிக்கு மாபெரும் கண்டன ஆர்பாட்டம் நடைபெறும். சேலம் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஆத்தூர் வடக்கு மற்றும் தெற்கு நகரத்தில் நகர கழக செயலாளர்கள் பாலசுப்ரமணியம், ஏ.ஜி.ராமசந்திரன் அவர்களின் தலைமையில் பஸ் நிலையம் அருகில், நரசிங்கபுரம் நகரம், ஆத்தூர் கிழக்கு ஒன்றியத்தில் நகர கழக செயலாளர் திரு.என்.பி.வேல்முருகன் மற்றும் ஒன்றிய கழக செயலாளர் திரு.செழியன் தலைமையில் நரசிங்கபுரம் நகராட்சி அலுவலகம் அருகில், சேலம் தெற்கு ஒன்றியத்தில் ஒன்றிய கழக செயலாளர்மாணிக்கம் தலைமையில் சேலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில், வீரபாண்டி தெற்கு ஒன்றியம், ஆட்டையாம்

பட்டி பேரூர் சார்பாக பேரூர் கழக செயலாளர் திரு.முருகபிரகாஷ் தலைமையில் ஆட்டையாம் பட்டி பேருந்து நிலையம் அருகில்,

வீரபாண்டி வடக்கு ஒன்றியம், இளம்பிள்ளை பேரூர் சார்பாக ஒன்றிய கழக செயலாளர்.சதீஷ் தலைமையில் இளம் பிள்ளை சந்தைபேட்டை அருகில், பனமரத்துப்பட்டி பனமரத்துப்பட்டி பேரூர், மல்லூர் பேரூர் சார்பாக மாவட்ட கழக எஸ்.ஆர். சிவலிங்கம் ஆகிய எனது தலைமையிலும், ஒன்றிய கழக செயலாளர் உமாசங்கர் முன்னிலையி லும் பனமரத்துப்பட்டி பேரூர் அண்ணா சிலை அருகில், அயோத்தியாப்பட்டணம் தெற்கு, வடக்கு ஒன்றியம் மற்றும் அயோத்தியாப்பட்டணம் பேரூர் சார்பாக ஒன்றிய கழகச் செயலாளர்கள் விஜய குமார், ரத்தினவேல் தலைமையில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில், வாழப்பாடி வடக்கு ஒன்றியம், வாழப்பாடி பேரூர் மற்றும் பேளூர் பேரூர் சார்பாக ஒன்றிய கழக செயலாளர் திரு.சக்கரவர்த்தி தலைமையில் வாழப்பாடி

ஒன்றியம், செயலாளர் தபால் நிலையம் அருகில், வாழப்பாடி தெற்கு ஒன்றியம், சார்பாக ஒன்றிய கழக செயலாளர் திரு.மாது தலைமையில் சிங்கிபுரம் தபால் நிலையம் அருகில், ஏற்காடு ஒன்றியத்தில் பஸ்நிலையம் அருகில் ராஜா ஒன்றிய கழக செயலாளர் அவர்களின் தலைமையில், பெத்தநாயக்கன்பாளையம் மத்தியம், தெற்கு, வடக்கு ஒன்றியம் மற்றும் பெத்தநாயக்கன்பாளையம் பேரூர், ஏத்தாப்பூர் பேரூர் சார்பாக ஒன்றிய கழகச் செயலாளர்கள் மூர்த்தி, அன்பு, மற்றும் சிவராமன் தலைமையில் யூனியன் ஆபிஸ் அருகில், ஆத்தூர் மேற்கு ஒன்றியம், மற்றும் கீரிப்பட்டி பேரூர் சார்பாக ஒன்றிய கழக செயலாளர் வரதராஜன் தலைமையில் கீரிப்பட்டி யூனியன் பேங்க் அருகில்,

கெங்கவல்லி ஒன்றியத்தில் ஒன்றிய கழக செயலாளர் சித்தார்த்தன் தலைமையில் கூடமலை பஸ் ஸ்டாண்ட், தலைவாசல் மத்திய ஒன்றியத்தில் ஒன்றிய கழக செயலாளர் மணி தலைமையில் தலைவாசல் பஸ் ஸ்டான்ட் அருகில், தலைவாசல் வடக்கு ஒன்றியத்தில் ஒன்றிய கழக செயலாளர் திரு.பாலமுருகன் தலைமையில் காட்டுக் கோட்டை பஸ் ஸ்டாப் அருகில், தலைவாசல் தெற்கு ஒன்றியத்தில் ஒன்றிய கழக செயலாளர் அழகுவேல் தலைமையில் வீரகனூர் புதுபஸ் நிலையம் அருகில், தம்மம்பட்டி பேரூரில் பேரூர் கழக செயலாளர் சண்முகம் தலைமையில் பஸ் நிலையம் அருகில், கெங்கவல்லி பேரூரில் பேரூர் கழக செயலாளர் பாலமுருகன் தலைமையில் அண்ணா சிலை அருகில், செந்தாரப்பட்டி பேரூரில் பேரூர் கழக செயலாளர் முருகேசன் தலைமையில் பஜனை மடம் காமராஜர் சிலை அருகில் தெடாவூர் பேரூரில் பேரூர் கழக செயலாளர் திரு.வேல் தலைமையில் அலுவலகம் எதிரில் நடைபெறுகிறது.

இந்த மாபெரும் கண்டன ஆர்பாட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், முன்னாள், இன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை கழக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தேர்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தின் துணை அமைப்புகளான அணிகளின் மாநில துணை அமைப்பாளர்கள், மாவட்ட தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடி கள் அனைவரும் தவறாமல் அவர்களுக்கு உட்பட்ட பகுதிகளில் கலந்து கொண்டு கண்டன குரலை பதிவு செய்து சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன் என்று அறிக்கை விடுத்துள்ளார்.

ஒன்றிய பா.ஜ.க. – துணை போகும் அ.தி.மு.க.வைக் கண்டித்து

ஈரோடு தெற்கு மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் ஆர்ப்பாட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் சு.முத்துசாமி அறிக்கை!

ஈரோடு, பிப். 12-

ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி அறிக்கை வருமாறு:-

தலைமை கழக அறிவிப்பின்படி ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாஜக, துணை போகும் அதிமுக! மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று (12.2.2026 வியாழக் கிழமை) காலை 10:30 மணிக்கு ஈரோடு தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட கீழ்கண்ட இடங்களில் நடைபெற உள்ளது.

ஈரோடு மாநகரத்தில் ஜவான் பில்டிங் முன்பும்,

மொடக்குறிச்சி மேற்கு ஒன்றியத்தில் முகாசி அனுமன்பள்ளியிலும், மொடக்குறிச்சி கிழக்கு ஒன்றியத்தில் மொடக்குறிச்சி நால்ரோட்டிலும், மொடக்குறிச்சி தெற்கு ஒன்றியத்தில் அரச்சலூர் அண்ணா நகரிலும், கொடுமுடி மேற்கு ஒன்றியத்தில் சிவகிரி அண்ணா மேடை அருகிலும், கொடுமுடி தெற்கு ஒன்றியத்தில் கொடுமுடி புதிய பேருந்து நிலையம் அருகிலும், கொடுமுடி வடக்கு ஒன்றியத்தில் கருமாண்டம் பாளையத்திலும் சென்னிமலை வடக்கு ஒன்றியத்தில் வள்ளிபுரத்தான் பாளையத்திலும், ஈரோடு ஒன்றியத்தில் சித்தோடு நால்ரோட்டிலும் நடைபெற உள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அந்தந்த இடங்களில் உள்ள இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஈரோடு தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, பேரூர் கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோன்.

குறிப்பு: அனைத்து ஒன்றிய செயலாளர்கள் அந்தந்த பகுதிகளில் உள்ள இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள், ஈரோடு தெற்கு மாவட்ட நிர்வாகிகள் அனைவரையும் வரவழைத்து ஒருங்கிணைந்து ஆர்ப்பாட்டம் நடத்திட வேண்டும்.

இவ்வாறு ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி தனது அறிக்கையில் கூறியுள்ளார்

பூண்டி நினைவு வெற்றிக் கோப்பைகள்:

திருவாரூரில் மாநில அளவிலான மாபெரும் கையுந்து பந்துப்போட்டி!

கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு வழங்குகிறார்!

திருவாரூர்,பிப்12-

திருவாரூர் மாவட்டம் கொரடாச்சேரியில் மாநில அளவிலான இளையோர் கையுந்துபந்து சாம்பியன் ஷிப் போட்டி, கொரடாச்சேரி அரசு ஆண்கள் உயர்நிலைப்பள்ளி மைதானத்தில் நடைபெற இருக்கிறது.

பூண்டி நினைவு கையுந்துபந்து கழகம் மற்றும் திருவாரூர் மாவட்ட கையுந்து பந்து கழகம் இணைந்து நடத்தும் போட்டிகளில் வென்ற அணிகளுக்கு கழக முதன்மை செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்று வழங்குகிறார். சிறப்பு விருந்தின ராக தொழில்துறை அமைச்சர் ட்டி. ஆர். பி. ராஜா அவர்கள் பங்கேற்கவிருக்கிறார்.

இதுகுறித்து மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி. கே.கலைவாணன் கூறிய தாவது,

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மாவட்டமான திருவாரூரில் பூண்டி. நினைவு கையுந்து பந்து கழகம் மற்றும் திருவாரூர் மாவட்ட கையுந்து பந்து கழகம் இணைந்து நடத்தும் ஆண்கள் மற்றும் பெண்கள் இளையோருக்கான மாநில அளவிலான போட்டி இன்று (12.02.2026) கொரடாச்சேரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் தொடங்கி 15.02.2026 வரை நடைபெறுகிறது. இதில் 35 மாவட்டங்களில் இருந்து ஆண்கள் அணியினரும், 28 மாவட்டங்களில் இருந்து பெண்கள் அணியினரும் பங்கேற்கின்றனர். ஏறத்தாழ 900 வீரர்கள் வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

கொரடாச்சேரியில் ஏற்கனவே இந்தியா அளவிலான கையுந்து பந்து போட்டிகள் பல நடத்தப்பட்டுள்ளது. தற்போது இந்த போட்டிகளில் தேர்வாகும் அணிகள் ஒடிசாவில் நடைபெறும் இறுதிப்போட்டியில் பங்கேற்க தகுதி அடைவார்கள். மாநில அளவில் இருக்கும் எந்த ஒரு அணியிலும் கண்டிப்பாக திருவாரூர் மாவட்ட விளையாட்டு வீரர் இடம்பெறும் நிலை உள்ளது.

தமிழ்நாட்டில் கல்வியில் மட்டுமின்றி விளையாட்டிலும் முதன்மையிடம் பெரும் வகையில் முதலமைச்சர் தளபதி அவர்களும் ,துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செயல்பட்டு விளை யாட்டுக்கு என வேலைவாய்ப்பில் உள்ஒதுக்கீடு தந்து சிறப்பித்து திராவிடல் மடல் ஆட்சியை தந்துகொண்டிருப்பது குறிப்பிடத்தக்காது.

இந்த போட்டிகளின் இறுதிநாளில் கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் பங்கேற்று வெற்றிக்கோப்பைகளை வழங்க இருக்கிறார்.

இவ்வாறு பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ. கூறியுள்ளார்.

ஒன்றிய பா.ஜ.க. – துணை போகும் அ.தி.மு.க.வை கண்டித்து

ஈரோடு வடக்கு மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் ஆர்ப்பாட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம் அறிக்கை!

ஈரோடு, பிப். 12–

தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த ஒன்றிய பாஜக அரசையும், அதற்கு ஒத்துதும் அடிமை அதிமுகவையும் கண்டித்து மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் 12.2.2026 வியாழக்கிழமை மாலை 4 மணியளவில்மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறும்

அந்தியூர் வடக்கு ஒன்றியம் பர்கூர் தாமரைக்கரைபேருந்து நிறுத்தம் அருகில் பொதுக்குழு

உறுப்பினர் ஆர்.மாதேஸ்வரன் தலைமையிலும் அந்தியூர் தெற்கு, மத்திய ஒன்றியத்தில் அந்தியூர், பத்திரகாளியம்மன் கோவில் ரவுண்டானா அருகில் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம் தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ்.பி.புகழேந்தி தலைமையிலும் அம்மாபேட்டை வடக்கு ஒன்றியம், சனிசந்தை சென்னம்பட்டி ஊராட்சி அலுவலகம் அருகில் பொதுக்குழு உறுப்பினர் எஸ்.கிருஷ்ணமூர்த்தி தலைமையிலும் டி.என்.பாளையம் வடக்கு ஒன்றியம் வடக்கு, தெற்கு ஒன்றியம் டி.என்.பாளையம் அண்ணா சிலை அருகில் கழக நெசவாளர் அணி செயலாளர் சிந்து ரவிச்சந்திரன் மாவட்ட அவை தலைவர் எ.பெருமாள்சாமி தலைமையிலும் நம்பியூர் கிழக்கு, மேற்கு ஒன்றியம் நம்பியூர் பேருந்து நிலையம் அருகில் தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.வெ.குமணன் உறுப்பினர் பொதுக்குழு உறுப்பினர்கள் சரஸ்வதி பழனிச்சாமி, எஸ்.கீதா தலைமையிலும் கோபி வடக்கு, தெற்கு, மத்திய ஒன்றியம் கோபி பொலவகாளி பாளையம் நால்ரோடு அருகில் கழக விவசாய அணி இணை செயலாளர் கள்ளிப்பட்டி மணி, கழக நெசவாளர் அணி துணை செயலாளர் ஜி.வி.மணிமாறன் பொதுக்குழு உறுப்பினர் எஸ்.எஸ். வெள்ளியங்கிரி தலைமையிலும் பவானிசாகர் வடக்கு, தெற்கு ஒன்றியம் பவானிசாகர் மார்க்கெட் சதுக்கம் அருகில் தலைமை செயற்குழு உறுப்பினர் கு. சுப்ரமணியம், மாவட்ட துணை செயலாளர் கீதாநடராஜன் பொதுக்குழு உறுப்பினர் கா.கி. ராஜேந்திரன் தலைமையிலும் சக்தி வடக்கு, தெற்கு, ஒன்றியம் மற்றும் சக்தி நகராட்சி சத்தியமங்கலம் பேருந்து நிலையம் அருகில் கழக விவசாய அணி இணைச் செயலாளர் எல்.பி.தர்மலிங்கம் தலைமையிலும் தாளவாடி கிழக்கு, மேற்கு ஒன்றியம் தாளவாடி பேருந்து நிலையம் அருகில் மாவட்ட துணை செயலாளர் எஸ். எஸ்.குருசாமி தலைமையிலும் கோபி நகராட்சியில் கோபிசெட்டி பாளையம், ஜியான் தியேட்டர் அருகில் மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம், கழக மருத்துவ அணி துணை தலைவர் டாக்டர் எம்.செந்தில்நாதன், கழக மகளிர் அணி ஆலோசனைக் குழு உறுப்பினர் காயத்ரி சீனிவாசன் தலைமையிலும் புளியம்பட்டி ஒன்றியம் புளியம்பட்டி பேருந்து நிலையம் அருகில் பொதுக்குழு உறுப்பினர் வி.ஜெயராஜ் தலைமையிலும் நடைபெற உள்ளது.

இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் அந்தந்த பகுதிகளில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள், இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

வனவிலங்கு அச்சுறுத்தல்களிலிருந்து பாதிக்கப்பட்ட பழங்குடியின குழுக்களுக்கு மத்திய நிதியுதவி பெறும் திட்டங்களின் கீழ்

தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட நிதி அல்லது தொழில்நுட்ப உதவியின் விவரங்கள் என்ன?

மக்களவையில் – கே.ஈஸ்வரசாமி கேள்வி!

புதுடெல்லி,பிப்.12–

வனவிலங்கு அச்சுறுத்தல்களிலிருந்து பாதிக்கப்பட்ட பழங்குடியின குழுக்களுக்குப் பாதுகாப்பான வீட்டு வசதி மற்றும் நிலையான வாழ்வாதாரத்தை உறுதி செய்வதற்காக, ஏதேனும் மத்திய அல்லது மத்திய நிதியுதவி பெறும் திட்டங்களின் கீழ் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட நிதி அல்லது தொழில்நுட்ப உதவியின் விவரங்கள் என்ன என்று மக்களவையில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி கேள்வி எழுப்பினார்.

சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் பின்வருவனவற்றைத் தெரிவிக்க விரும்புவாரா,

தமிழ்நாட்டின் ஆனைமலை வனப்பகுதிக்குள் அமைந்துள்ள நவமலை குக்கிராமத்தில், வனவிலங்குகளின் ஊடுருவல் அதிகரித்து பழங்குடியின மக்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிப்பது குறித்து அரசு அறிந்துள்ளதா? அப்படியெனில், அதன் விவரங்கள் என்ன?

இத்தகைய அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் காடு சார்ந்து வாழும் சமூகங்களின் பாதுகாப்பு, வாழ்விடப் பாதுகாப்பு மற்றும் அத்தியாவசிய சேவைகளைப் பெறுவதை உறுதி செய்ய, மாநில அரசுடன் இணைந்து மத்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

மனித வனவிலங்கு மோதல்களால் பாதிக்கப்பட்ட பழங்குடியின சமூகங்களை, குறிப்பாகச் சூழலியல் ரீதியாக முக்கியமான பகுதிகளில் இருந்து இடமாற்றம் செய்ய அல்லது மறுவாழ்வு அளிக்க ஏதேனும் தேசிய அளவிலான திட்டம் அல்லது வழிகாட்டுதல்களை அரசு வகுத்துள்ளதா?

வனவிலங்கு அச்சுறுத்தல்களிலிருந்து பாதிக்கப்பட்ட பழங்குடியின குழுக்களுக்குப் பாதுகாப்பான வீட்டு வசதி மற்றும் நிலையான வாழ்வாதாரத்தை உறுதி செய்வதற்காக, ஏதேனும் மத்திய அல்லது மத்திய

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சி.தங்கமுத்து
பிப்ரவரி 12 (2016)



கழகம் துவக்கிய காலத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், பொதுச்செயலாளர் பேராசிரியர் ஆகியோரின் நன்மதிப்பையும் பெற்றவர்.

குளித்தலை வட்டம், கள்ளப்பள்ளி கிளைச் செயலாளராகவும், மாவட்டப் பிரதிநிதியாகவும் கழகப் பணியாற்றியவர்.

கழகம் நடத்திய மாநாடுகளிலும், போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

கழகம் அறிவித்த சட்ட எரிப்பு போராட்டத்தில் பங்கேற்று மூன்று மாதம் கடுங்காவல் தண்டனை பெற்றவர். தன் இறுதிகாலம் வரை கழகத்திற்காக பாடுபட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கவிஞர் குடியரசு
பிப்ரவரி 12 (2002)

"திராவிட இயக்கத்தின் தீப்பொறிக் கவிஞராகவும், எரிமலைக் கனல் உமிழும் எழுச்சிக் கவிஞராகவும் திகழ்ந்தவர். தத்துவக் கவிஞர் குடியரசு.

"என் தலைமையில் பகுத்தறிவுப் பாடல்களை – இன உணர்வுக் கவிதைகளை வழங்கியவர்" என தலைவர் கலைஞர் அவர்களால் நினைவு கூரப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.